27 FEB 2000
மாநகராட்சி மன்றம்




# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: i வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (27 - 02 - 2000) *VALAMPURI* ஒலி: 70


★ கைது செய்தல் ★ காணாமல் போதல்
★ சித்திரவதை ★ பாலியல்வல்லுறவு

## இலங்கையில் சர்வசாதாரணம்

## அமெ. மனித உரிமை குழு அறிக்கை

(கொழும்பு)

கைதுசெய்தல், காணாமல் போதல், சித்திரவதை யுவதிகள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தல் போன்ற சம்பவங்களில் இலங்கை முன்னணியில் இருப்பதாக அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் ஜனநாயக மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பிரிவு மனித உரிமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஆறாயிரம் பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்களான,

காணாமல் போதல் கைது செய்தல், சித்திரவதைக்குள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருக்கேதீஸ்வர ஆலய

## சிவராத்திரி வழிபாடு 500 பக்தர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

அடுத்த மாதம் 4 ஆம்திகதி கொண்டாட இருக்கும் சிவராத்திரி தினத்திற்கு கொழும்பில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு 500 யாத்திரிகர்கள் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் திருக்கேதீஸ்வர ஆலயம் வந்த பின்பு சிவராத்திரி தினத்திற்கு முதல் முதலாக இந்த வருடமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயம் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்று இருப்பதினால் கும்பாபிஷேகம் செய்யாமல் பூசைகள் நடத்த முடியாதிருப்பதால் பஜனைகளும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ இலங்கையின் இனப்பிரச்சினை சமாதானப் பேச்சில்

# விடுதலைப் புலிகளுடன் மட்டுமே

# அரசு பேசுமானால் நாம் எதிர்ப்பல்ல!

## தமிழ்க்கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வே அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மட்டும் தான் அரசு பேச வேண்டுமென்றால் நாம் அதற்குத் தடையாக ஒரு போதும் இருக்க மாட்டோம். இந்த விடயத்தில் ஒதுங்கியிருக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

இப்படித்தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட்,ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் கூட்டாகத் தெரிவித்தன;

இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே வெளிநாட்டமைச்சர் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகக் கொண்டு அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்துமானால் நாம் அதற்குத் தடையாக இருக்க மாட்டோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி திருமலை மாவட்ட எம்.பியும் கூட்டணி செயலருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பு முக்கியமானது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. புலிகள் ஜனநாயகத்துக்குத் திரும்பி தேர்தலில் போட்டியிட்டால் எனது வாக்குரிமையை புலிகளுக்கே பாவிப்பேன்.

இனப் பிரச்சினைத் தீர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை சமாதானத் தீர்வுக்கு சகலருடனும் பேச்சுநடத்த வேண்டும்

### டக்ளஸ் எம்.பி.கருத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது யுத்த நிறுத்தம் செய்வதாக இருந்தால் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் மட்டும் பேசவேண்டும்.

இவ்வாறு ஈ. பி, டி, பியின் செயலாளர்நாயகமும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி -ரணில் கடிதப்பரிமாற்றம்

## ஜனாதிபதியின்கடிதத்திற்கு ரணில் பதில் கடிதம்

(கொழும்பு)

அரசாங்க சேவை, பொலிஸ் சேவை, நீதிச்சேவை போன்றவற்றிற்கான சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை அடக்கிய கடிதம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ரணிலுக்கு அனுப்பி வைத்த

[6 ஆம்பக்கம் பார்க்க]

## மன்னார் கடலில் 18மீனவர் கடற் படையினரால் கைது

(வவுனியா)

மன்னார்க் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 18 மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கற்பிட்டிப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 18

(6 ஆம் பக்கம் பார்க்க)

இலண்டன் சென்ற ஆயர்கள்

## விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசுவர்

(கொழும்பு)

நேற்றைய தினம் இலண்டனுக்கு பயணத்தை மேற்கொண்ட மன்னார் மறை மாவட்ட ஆயர்அதிவணக்கத்துக்குரிய இராயப்புயோசப்பு மற்றும் இரத்தினபுரி மறை மாவட்டஆயர் மல்கம் றஞ்சித் ஆகியோர் இலண்டனில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சல்லித்தீவு சம்பவத்தைக் கண்டித்து பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

(திருமலை)

கடந்த வியாழக்கிழமை திருகோணமலையின் சல்லிக் கிராமத்தில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களைக் கண்டித்து சல்லித்தீவு கிராமத்தைச் சேர்ந்த சுமார் 4500 பொதுமக்கள் நேற்று புல்மோட்டை சாம்பல் தீவுப் பாலத்தில் வீதி மறியல் போராட்டத்தை நடத்தினர்.

காலை 7.30 மணி தொடக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜெகன் எம். பி. யின் நடவடிக்கை

## யாழ்.கடலில் மீன்பிடிக்க அனுமதி

## மீனவர் இன்று கடலில் இறங்குவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடல் நீரேரியில் மீன் பிடிப்பதற்குக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10ம் திகதி விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பாக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி பி.யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி. கே. ஜெகன் நேற்று இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளுடன் இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தினர்.

512 வது பிரிகேட் தலைமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்


ஆடு விற்பனைக்குண்டு

நல்லின யமுனாப்பாரி கடாக்கள், மற்றும் மறிக் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு S.P. தாஸன், இல 75, செட்டித்தெரு, நல்லூர். [97]


## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடிநமசிவாய வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை 1.30 மணியளவில் கொட்டடி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. (க-7)

★ ★ ★

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (க-82)

★ ★ ★

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் அருட் சகோதரி எத்தல்வீவா தலைமையில் நடைபெறும். (க-14)

★ ★ ★

யாழ். மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பாடசாலை அதிபர் வ. கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்விவலய உடற்கல்விப் பணிப்பாளர் திரு. க. குமாரசாமி இப்போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் சாம்பியன்

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஈ.ஆர் போக்குவரத்துச் சேவையின் ஆதரவில் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியனானது.

வடமராட்சியைச்சேர்ந்த 34விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய இவ் உதைபந்தாட்டசுற்றுப்போட்டியிலே வதிரிபொமோர்ஸ் விளையாட்டுக்கழகம் 2ஆம் இடத்தையும், உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகம் 3ஆம்இடத்தையும் பெற்றது: (செ-52)

## நாவாந்துறை சென்.நீக்கிலஸில் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்).

நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டுநிறைவை முன்னிட்டு சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி இன்றும் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

நேற்றைய ஆட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக் கழகம். மோதியது இன்று சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழகம் விளையாடும். (ந)

### மட்டக்களப்பில்

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு இம்மாத நிவாரணம் அனுப்பப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 160 குடும்பங்களுக்கு பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிவாரணம் இராணுவ கட்டுப்பாடற்ற புல்லுமலை. கோப்பாவெளி, மரப்பாலம் ஆகிய கிராமங்களிற்கே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஏழு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் 3 லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

நிவாரணப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்ட போது செஞ்சிலுவைச் சங்க மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-60)

## அம்பன்பகுதி பாடசாலை சாதனை

(புலோலி)

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையே பாரம்பரிய கலைமேம்பாட்டுப் பேரவை நடாத்திய போட்களில் அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை இரு போட்டிகளில் முதல் இடங்களைத்தட்டிச் சாதனையை நிலை நிறுத்தியுள்ளது

இப்பாடசாலையின் கரகாட்டம், காத்தவராயன் சிந்துநடைக்கூத்து ஆகிய இரு நிகழ்ச்சிகளுமே முதல் இடங்களைத்தட்டிக் கொண்ட நிகழ்ச்சிகளாகும்.

நிகச்ழ்சிகளில் பங்குபற்றிய மாணவர்களைப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாராட்டியுள்ளது. (க-43-52)

## இன்று புராணபடன போட்டி

(இணுவில்)

அகில இலங்கை சைவபுலவர் சங்கத்தால், பாடசாலை மாணவரிடையே நடாத்தப்படும் புராணபடனபோட்டி, வண்ணர் பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இன்று நடைபெறும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சு. சத்தியதாசன் தெரிவித்துள்ளார். (க-49)

## பொதுக் கூட்டம்

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச செயலக நுகர்வோர் பாதுகாப்பு சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் ஆ. சிவசாமி அறிவித்துள்ளார். (க-23)

## மினி பொலிஸ் நிலையம்

(மட்டக்களப்பு)

காத்தான் குடியில் இடம்பெற்ற பரபரப்பூட்டும் கொள்ளைச் சம்பவங்களை அடுத்து காத்தான் குடி ரெலிகொம் நிறுவனத்துக்கு முன் மினி பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டது, (க-60)

## இன்றுபோட்டிப் பரீட்சை

எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறவுள்ள மகா சிவராத்திரிதினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தில் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை கீழ்ப்பிரிவு (தரம்6,7), மத்திய பிரிவு (தரம்8,9), மேற்பிரிவு (தரம்10,11) என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

இப்பரீட்சையில் ஒவ்வொருபிரிவிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூன்று மாணவர்களுக்கு சிவராத்திரி தினத்தன்று பரிசில்களும், சான்றிதழ்களும் ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றத்தினால் வழங்கப்படவுள்ளது. (க-57)

# நாட்டில் சமாதானம் ஏற்படாமல் எந்தத்துறையும் முன்னேறமுடியாது

## றொனிடிமெல் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் அடையப்படாமல் எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடையமுடியாது என்றும் தேசியக் கருத்தொற்றுமை என்பது மிக அவசியமானது என்றும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் றொனிடிமெல் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய றொனிடிமெல் தொடர்ந்து தெரிவித்ததாவது; ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு வாழ்க்கையில் எந்தவித சவாலையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் உள்ளதாயும் கூறிய அவர் ஜனாதிபதியும் விஜயகுமார துங்காவும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு வழங்கியமையை நினைவுபடுத்தினார்.

இன்று நாட்டின் வன்முறையும் ஊழலும் அற்ற அரசியல் கலாச்சாரமே தேவை என்றும் தெரிவித்த றொனிடிமெல் அரசியல் யாப்பு என்பது நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாப்பதாக அமையவேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (க-4)

## அஸ்மா மருந்துக்கு தட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் தொய்வு நோய்களுக்கான (அஸ்மா) மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்கு இந்நோய்க்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் மருந்து வகைகளை வெளிக் கடைகளிலேயே வாங்க வேண்டிய அவலநிலைக்குள்ளாகி இருப்பதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-52)

## பால் கொள்வனவுக்கு ஏற்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (லிப்கோ) சாவகச்சேரியிலுள்ள பால் பண்ணையாளர்களிடம் இருந்து பாலைக் கொள்வனவு செய்து விநியோகம் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருவதாக மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சாவகச்சேரியிலுள்ள பால் பண்ணையாளர்களுக்குப் பல்வேறுவிதமான உதவிகளையும் வழங்கி பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-77)

## அம்பாளுக்கு அழகிய சித்திரத்தேர்

அருள்மிகு அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்பாளுக்கு சுமார் 40இலட்சரூபா செலவில் அழகிய சித்திரத்தேர் உருவாக்கப்படவுள்ளது.

இத்தேர்த் திருப்பணிகளுக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் பருத்தித்துறை இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு இலக்கம்17840 இல் நிதியைச் சேர்க்கலாம் என மேற்படி ஆலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். க-52)

## (இராசி பலன்)

27.02,2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மாசி - 15)

அட்டமி நள்ளிரவு 1.10 வரை, அனுஷம் மாலை 5.26 வரை, மரணயோகம் கரிநாள், இராகுகாலம் மாலை 5.30 முதல் 6.58 வரை, சுபநேரம் காலை 9.57 முதல் 11.25 வரை.

**மேடம்:** கீழோர் நட்பு, தொழில் பாதிப்பு, யோசனை.

**இடபம்:** இனிய காட்சி, குடும்பு சுகம், பணவரவு.

**மிதுனம்:** தீர்க்கதரிசனம், ஞான மார்க்கம், காரியவெற்றி.

**கடகம்:** சுற்றத்தவர்சினம், தொழில் போட்டி, குழப்பம்.

**சிங்கம்:** தந்திரோபாயம், பணக் கஸ்டம், உடல் உபாதை.

**கன்னி:** நினைத்ததைச்சாதித்தல், திருமணயோகம் சகோதர உதவி.

**துலாம்:** படபடப்பு, எதிரியின் கோபம், அடிமைநிலை.

**விருச்சிகம்:** புதியபதவி, தாய்அன்பு வீண்புலம்பல்.

**தனுசு:** கருத்துவேறுபாடு, புத்திரர் கவலை, மனமாற்றம்.

**மகரம்:** குடும்ப வேற்றுமை, ஆவேசம், அலைச்சல்.

**கும்பம்:** பிரச்சனைக்குத்தீர்வு, காதல் சிறப்பு, செலவு.

**மீனம்:** கடிதஉறவு ஆசாரம், பழைய நினைவுகள்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## விதவைகள் விபரம் சேகரிப்பு

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விதவைகளின் விபரங்களை சேகரிக்கும் பணியில் பிரதேசசெயலகம் ஈடுபட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சின் வேண்டுகோளிற்கு இணங்க சேகரிக்கப்படுகிறது.

கணவனை இழந்த குடும்பத்தினைச் சேர்ந்தபெண்கள் செயலகத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து உடன் ஒப்படைக்குமாறு பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (க-23)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம்மாதம் 26 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகிறது.

**சங்கானை**

136080 ஏ

**யாழ்ப்பாணம்**

136022 ஏ

**கோப்பாய்**

| | |
|---|---|
| 133274 ஏ | 134034 ஏ |
| 136419 ஏ | 136419 பி |
| 136419 சி | 136419 டி |
| 136419 ஈ | 136716 ஏ |
| 136716 பி | 136754 ஒ |
| 136754 பி | 136754 சி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 128067 ஏ | 128091 ஏ |
| 128091 பி | 128091 சி |
| 128092 ஏ | 128311 ஏ |
| 128311 பி | 128311 சி |
| 128311 டி | 128318 ஏ |
| 128318 பி | 128320 ஏ |
| 128325 ஏ | 128325 பி |
| 128325 சி | 128325 டி |
| 133053 ஏ | 134227 ஏ |
| 136020 ஏ | 136021 ஏ |
| 136023 ஏ | 136028 ஏ |
| 136036 ஏ | 138327 ஏ |

**தெல்லிப்பழை**

136302 ஏ

**உடுவில்**

| | |
|---|---|
| 134134 ஏ | 134134 பி |
| 136303 ஏ | 136303 பி |
| 135769 ஏ | 135769 பி |
| 135769 சி | 135769 டி |


# இதய அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களது சிரேஷ்ட அன்புப் புதல்வன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மறைவு எங்களை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரின் அன்புப் பெற்றோர் உறவினர்கட்கும் எமது அனுதாபங்களை மனமார சமர்ப்பிக்கின்றோம். பிரயாணக் கஸ்டங்களால் நேரில் வந்து எமக் கடமைகளில் பங்கு பற்றாததையிட்டு வருந்துகிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்கு ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.

சி. திருநாவுக்கரசு குடும்பத்தினர்
(முன்னை நாள் ஊழியர் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணம்)
ஓடை லேன், வண்ணார்பண்ணை.

(192)

# காங்கேசன் தடுப்பு முகாமில் 17 பேர் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் மூன்று பெண்கள் உட்பட 17 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பு அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், தடுத்து வைக்கப்பட்டோரில் நான்கு இந்திய கடற்றொழிலாளர்களும் அடங்குவர் என்றும் தெரிவித்தார். (க)

## இடம்பெயர்ந்தோருக்கான குடியிருப்பு வசதிகளை வழங்க யு. என். எச். சி. ஆர். நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் பிறஇடங்களிலும் வசித்து வரும் குடும்பங்களிற்கான குடியிருப்பு வசதிகளை அகதிகளுக்கான ஐக்கிய நடுகள் அமைப்பினரால் செய்து கொடுக்கப்படவுள்ளது.

இதற்காக ஒரு குடியிருப்பு அமைப்பதற்கு 8 அஸ்பெஸ்ரஸ் தகடுகளும் 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு வசதியாக ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் கிராம சேவையாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தரைக் கொண்ட குழுஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

மேற்படி குடியிருப்புக்கள் தமது சொந்த இடங்களிற்கு செல்லும்போது கழற்றிச் செல்லப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (க-24)

## கஞ்சாவைக் கொண்டு சென்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

(மட்டக்களப்பு)

18 கிலோ கஞ்சா வைத்திருந்த நபரை எதிர்வரும் 1ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கா. தட்சணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடிப்பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே கஞ்சா மூடையுடன் வந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கஞ்சாவைக் கொண்டுசெல்வதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பொலிஸார் மோட்டார்சைக்கிளில் சம்பந்தப்பட்டநபரை பின்தொடர்ந்ததாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் 1500 ஆசிரியவெற்றிடங்கள் உண்டு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் சுமார் 1500 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிய வருகின்றது. விசேடமாக ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியவளம் மிகவும் குன்றிய நிலையிலேயே இருக்கின்றது. கல்வித்திணைக்களத்தின் வலயங்களில் அண்மையில் ஆங்கிலம் போதிப்பதற்கான பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கான இலக்கண இலக்கிய அடிப்படை அறிவு இவர்களிடம் காணப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லோராலும் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழியை கற்பிக்கமுடியும் என எதிர்பார்ப்பது தவறான எடுகோள் எனக்கல்விமான்கள் அபிப்பிராயம் கொள்கின்றனர்.

மேலும்யாழ்ப்பாணக்குடாநாட்டில் 87 நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் தரமான நூலகங்களோ அல்லது நூல்களோ இருக்காத இடங்களுக்குங்கூட இப்பதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுள் 90 சதவீதமானவர்களுக்குக்கூட நூலகம் பற்றிய அனுபவமோ அல்லது அறிவோ இல்லாதவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குடாநாட்டுப் பாடசாலைகளில் உடற்கல்வியைப் போதிப்பதற்குரிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிய வருகின்து. (க-77)

## நெசவாளர் விபரம் சேகரிப்பு

(வட்டுக்கோட்டை)

கைத்தொழில் திணைக்களத்தினால் மானியம் வழங்குவதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள கைத்தறி நூல் விற்பனையாளர்கள், கைத்தறி உரிமையாளர்கள், தனியார் நெசவாளர்களினுடைய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. (க-24)

## தப்பியோடிய படையினர் 418 பேர் மீண்டும் இணைவு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய படையினர் மீண்டும் சேவையில் இணைவதற்கான பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் மாலை வரை 418 பேர் மீண்டும் இராணுவத்தில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

இப்பொது மன்னிப்புக் காலம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை உள்ளது என்றும் மீண்டும் இணைந்தவர்களுக்கு எந்தவித தண்டனையும் வழங்கப்படவில்லை என்பதோடு அவர்கள் முன்பிருந்த பதவிகளிலேயே அமர்த்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை வங்கிக்கான இவ் வருட நிதி ஒதுக்கீடுகள் இதுவரை வரவில்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற இலங்கை வங்கியின் 2000ம் ஆண்டுக்கான கடன் வழங்குவதற்குரிய நிதி ஒதுக்கீடு எதுவும் இதுவரை வரவில்லை எனத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக இலங்கை வங்கிக் கிளைகளில் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர் மத்தியில் அதிருப்தி நிலை தோன்றியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதே வேளை யாழ்ப்பாண வங்கி வாடிக்கையாளர்களுக்கு உதவித் திட்டங்களை வழங்குவதற்கு தலைமையகம் பின்னடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (க-77)

தமிழக முன்னாள் முதல்வர்

# செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக புதுடில்லி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக புதுடில்லி உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர் சட்டத்திற்கு புறம்பான வகையில் தனக்கு சொந்தமான நிறுவனத்திற்கு அரசாங்க நிலத்தை குறைந்த விலைக்கு (சந்தை விலையிலும் பார்க்க குறைந்த விலையில்) விற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே புதுடில்லி நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியது.

பல்வேறு ஊழல் குற்றச்சாட்டினை எதிர் கொண்டிருக்கும் செல்வி ஜெயலலிதாவுக்கு உச்ச நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு அவரது அரசியல் வாழ்வில் பெரிய பின்னடைவாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-9)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் பொது மக்கள் பலர் பலி!

(புதுடில்லி)

காஷ்மீரில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடாத்திய திடீர்த் தாக்குதலில் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் புதுடில்லி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது படையினர் திருப்பித் தாக்கியதில் தீவிரவாதிகள் தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (க-5)

## இரண்டாம் உலகயுத்த காலத்தில் வீசப்பட்ட குண்டு இத்தாலியில் மீட்பு

(இத்தாலி)

இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில், உம்பிரியா ஓர்வியேற்றோ நகருக்கண்மையில் 1944 ஜனவரி 18 ஆம் திகதி அமெரிக்காவால் போடப்பட்ட 250 கிலோ கிராம் எடை கொண்ட குண்டு, அண்மையில் பாதுகாப்பாக அகற்றப்பட்டது.

இத்தாலியில் ரோம்-புளோரன்ஸ் பிரதான போக்குவரத்துப் பாதை மற்றும் ரோம்-மிலான் ரயில்பாதை என்பனவற்றை அரை மணித்தியாலயமாக மூடி, அப்பகுதியில் வசிக்கும் 500 பேரை வீடுகளில் இருந்து வெளியேற்றிய இராணுவ நிபுணர்கள்; 56 வருடங்களுக்கு முன் போடப்பட்டு வெடிக்காதிருந்த மேற்படி குண்டினை மீட்டனர் என தெரியவருகிறது. (க-9)

# நைஜீரியாவில் தொடரும் மோதல் 200 இற்கும் மேற்பட்டோர் பலி

(கடுனா)

நைஜீரியாவின் கடுனா மாநிலத்தில் கிறீஸ்தவர்களுக்கும். முஸ்லிம்களுக்கும் இடையில் இடம் பெற்று வரும் மோதல்களில். இரு தரப்பிலும் சுமார் 200 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி மோதல்கள் மேலும் தொடராவண்ணம் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள்,மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள்ஆகியவற்றில் ஆயுதம் தரித்த படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு ஆதரவான சட்டம் ஒன்றினை நைஜீய அரசு நிறைவேற்றியதை அடுத்தே மேற்படி மோதல் உச்சக்கட்டத்தை அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது,

நைஜீரிய ஜனாதிபதி ஒபாசாங்கோ ஓர் கிறீஸ்தவராக இருந்தும்கூட முஸ்லிம்கள் பக்கம் இவரின் செயற்பாடு அமைவது குறித்து அந்நாட்டு கிறீஸ்தவர்கள் பலத்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

14 பொதுமக்கள் இந்தியப் படையால்

# படுமோசமாகக் கொல்லப்பட்டனர் பாக். அரசு குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தினர் காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையும் மீறி, பாகிஸ்தான் கிராமம் ஒன்றிற்குள் புகுந்து 14 பொதுமக்களைக்கொலை செய்துவிட்டதாக பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டி உள்ளது.

ஒதுக்குப்புறமான பாகிஸ்தானின் கிராமத்திற்குள் அத்துமீறிப் புகுந்த இந்திய படையணியினரே இந்தகைய கொடூர செயல்களை புரிந்தனராம்.

அப்பாவிப் பொதுமக்களை கத்திகள் பொல்லுகள் என்பவற்றினால் தாக்கியது மட்டுமல்லாது இறுதியில் துப்பாக்கிகளால் சுட்டுக் கொன்றுவிட்டனர் என்றும் பாகிஸ்தான் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை-

பாகிஸ்தானின் இக்குற்றச்சாட்டானது அர்த்தமற்றதும் வீணான பழி சுமத்தும் ஒரு செயலுமாகும் என இந்தியப் படைத்தரப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். (க-9)

## பி. ஜே. பி முன்னணியில்

(புதுடில்லி)

பீஹார், ஹரியானா, ஒரிஸா மாநிலங்களில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலின் போது வாக்கு பதிவு எண்ணிக்கையின் படி பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் முன்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சமாதான விரும்பிகள் சுற்றுப்பயணம்

(இலண்டன்)

கொலம்பியாவில் சமாதான முயற்சிகளில்ஈடுபட்டிருக்கும் சமாதான விரும்பிகள் தமது முயற்சிகளுக்கு ஆதரவு தேடும் வகையில் ஐரோப்பிய சுற்றுப்பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர். (க-9)

போர்நடவடிக்கையால்

# பாதிக்கப்பட்ட 3248 பேரை ச. செ. சங்கம் பார்வையிட்டது

(மட்டக்களப்பு)

போர் நடவடிக்கைகளால் கைது செய்யப்பட்ட 3248இற்கும் மேலானோரை ஏறத்தாழ 163 தடுப்புக்காவல் நிலையங்களில் பார்வையிட்டுள்ளது டன் 4900 செய்திகளை விநியோகித்திருக்கிறது இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும்: கடந்த ஆண்டு புரட்டாதி மாத இறுதிவரையே மேற்படி நடவடிக்கைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனது நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவின் மூலம் 26 இற்கும் மேற்பட்ட ஆரம்ப மருத்துவ சேவை நிலையங்கள் மூலமும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 892 நோயாளருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து போக்கு வரத்து வசதியளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுதவிர்ந்த நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

போரில் ஈடுபடும் பகுதியினரில் 6023 இற்கு மேற்பட்ட படையினருக்கும்5944 வரையான பொது மக்களுக்கும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் விளக்கவுரைகளை வழங்கியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 160 இற்கும் மேற்பட்ட கிணறுகளை திருத்தியமைத்ததுடன் 80 இற்கும் மேற்பட்ட புதிய கிணறுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளது எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-60)

## கைதடி, சாவகச்சேரிப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(திருநெல்வேலி)

கைதடி சாவகச்சேரிப் பகுதிகளுக்கு ஏப்ரலில் மின்சாரம் வழங்கும்வகையில் மின்னிணைப்புவேலைகள்துரிதமாக நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்ட இருபகுதிகளிலும் 1990 ஆம் ஆண்டு வரை மின்விநியோகம் இடம்பெற்ற இடங்களுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைதடி,சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு மின்விநியோகத்தை விஸ்த்தரிப்பதற்கு நிதி வசதி இல்லை என்றும் நிதிகிடைத்ததும் விஸ்த்தரிப்புவேலைகள் நடைபெறும் என்றும் மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டுவில், மீசாலை, உசன்' மிருசுவில், கொடிகாமம், பளை போன்ற இடங்களுக்கு தொடர்ந்து மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## க. பொ. த. (உ.தர) புதிய பாடத்திட்டம் மாதிரிவினாத்தாள்கள் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுத்தராதர உ/த பரீட்சைக்கு (புதியபாடத்திட்டம்) தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான மாதிரி வினாத்தாள்கள் கடந்த வாரம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான பாடநூல்கள் குறைவாக கிடைக்கப்பெற்றமை குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் வலய பணிப்பாளர்களுக்கு தெரிவித்துள்ளதாகவும் இதுவிடயம் மாகாணக் கல்விப்பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அவர் கல்வி உயர்கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதனால் அவற்றைப் பங்கிடுவதில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அதிபர்கள், ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க)

வடக்கு-கிழக்கில்

## கணவனை இழந்த பெண்களின் விபரங்கள் திரட்ட நடவடிக்கை

வடக்கு - கிழக்கில் கணவனை இழந்த பெண்களின் விபரங்கள் புனர்வாழ்வு புனர் அமைப்பு அமைச்சினால் திரட்டப்பட இருக்கின்றது. தற்போதைய நிலமையில் இவ்வாறான பெண்களின் சமூக, பொருளாதார நிலமைகள் பற்றிய இற்றை வரையிலான முழுவிபரங்களும் இரண்டு படிவங்களில் சேகரிக்கப்பட விருக்கின்றது.

படிவம்1: சமூகசேவை உத்தியோகத்தர் நேரடியாக பாதிக்கப்பட்டோரை சந்தித்து பூரணப்படுத்தப் படுமெனவும், பகுதி2: படிவம் 1ல் பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் இது சம்பந்தமன நடவடிக்கைகளும் விரைவில் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-24)

## கருஉருவாகும் போதே அவரவர் விதி நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது

### எல்லாம் விதிப்படியே நடக்கும்

சோதிடத்தின் தன்மையினை, சமுதாயத் தாக்கங்களுக்கு எவ்வாறு உதவி புரிகின்றன என்பதை இந்த கட்டுரையின் வழியாகக் காணலாம்.

சோதிடம் என்பது மனித குல ஆற்றலுக்கு தேவையான விழிப்புணர்ச்சியைத் தருவதாக உள்ளது. சோதிடம் மனித நம்பிக்கைக்கு ஏற்புடைய உண்மையானஇயற்கை சக்தியினை சார்ந்த கலை. வானில் உள்ள கோள்களின் இயக்கங்களுக்கு ஏற்ப மனித வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களை எளிதில் உணர முடிகின்றது.

#### மனித வாழ்க்கையின் மூன்று காலங்கள்

மனிதர்களின் வாழ்க்கையில் உள்ள காலங்கள் மூன்று, அவைகள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவையாகும். அவர்கள் அவர்களது இறந்தகாலத்தை உணரமுடிகின்றது. அதில் அவர்கள் அடைந்த லாப நஷ்ட அளவைக் கொண்டு நிகழ்காலத்தில் எதிர்காலத்தை எண்ணி ஏங்குகின்றனர். இப்போது அவர்களுக்கு உதவ முன்வருவது சோதிடக்கலை மட்டுமே. எனவே மனிதர்கள் சோதிட அளவு மட்டுமே அடைய முடிகின்றது. சூழ்நிலையின் கைதியாக வாழ்கின்ற மனிதர்கள், அதன் சூழ்நிலைக்கு ஏற்பவே வாழவேண்டியுள்ளது. இயற்கையின் அரவணைப்பால் ஏற்படும் சூழ்நிலையின் இடர்பாடுகளில் இருந்து மனிதன், மீண்டு வாழ இயலுமா? என்பதற்கு வழிகாட்டுவது சோதிடக்கலை:

மனிதர்கள் வாழ்க்கையின் ஊடே நடைபெறுகின்ற இயற்கை விபத்துக்களை புயல், வெள்ளம், எரிமலை சீற்றம், பூகம்பம் போன்றதான விபத்துக்கள் செயற்கை விபத்துக்கள் என கருதப்படுகின்ற எதிர்பாராத விபத்து, மனமாற்றம் பிறர் குறுக்கீடு, சூழ்ச்சிக்கு அகப்படல் என்பன எல்லாம், மனிதன் அறிவுக்கு எட்டாத இயற்கைக் காரணிகளான கோள்களால் ஏற்படுகின்றன. இவற்றினை அறிந்திட உதவுவன, சோதிடக்கலை தற்கால அறிவியல் முன்னேற்றம் என்பதைக்கூட சோதிடத்தின் அதாவது வானில் உள்ள கோள்களின் தாக்கம்தான், இவற்றின் கதிர்வீச்சு காரணத்தால் ஏற்பட்ட வளர்ச்சி தான் இவைகள்.

எனவே மனிதன் சமூக விலங்குஎன்பது ஏற்புடையது.

#### சமுதாய தாக்கம்

மனிதர்கள் வளர்ச்சி அடைந்த காலங்களில் இயற்கையினால் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்து, வான வெளியை ஆராயத்துவங்கினர். பின்னர் ஆய்வின் வளர்ச்சியால் சோதிட சாஸ்திரம் என்ற மாபெரும் கலையை உருவாக்கினார்கள். பிறந்த குழந்தையின்வளர்ச்சி நிலை, வாலிபர்களின் எதிர்கால நிலை, குடும்பத்தலைவனின் எதிர்பார்ப்புகள், என்பன பல சமுதாயத்தாக்கம் ஆகும். பிறந்த குழந்தை வளர்வது கல்விகற்பது பணிக்கு செல்வது அல்லது உழைப்பது, திருமணம், பிள்ளைப்பேறு, இறப்பு என்பன சகலமும், அவரவர் பிறப்பின் விதிக்கு ஏற்பவே நடக்கின்றன.

#### கோள்களும் குழந்தைப் பிறப்பும்

குழந்தைப் பிறப்பு என்பது மனித சமுதாய வாழ்க்கையில் முக்கியமானதாகும். பிறந்த குழந்தையின் அங்க அமைப்பை பார்த்தோமெனில், தலை-செவ்வாய், முகம்-சந்திரன், கழுத்து-புதன் தோள்கள்-சுக்கிரன், மார்பு-சூரியன், வயிறு-குரு, தொடை-சனி, மூட்டுகள் கீழ்கால்-இராகு, உள்ளங்கால்கள்-கேது என்ற அமைப்பில், கற்பத்தில் கரு உருவாகும் செயல்பாடுகள்முதல், கருவளர்ச்சி முதல், குழந்தை பிறப்பது வரை கோள்களின் ஆதிக்கம் மிகுந்துள்ளன.

கர்ப்பம் தாயின் கருப்பையில் வளர்கின்றது. இவ்வாறு வளர்கின்ற கர்ப்பத்தை பத்து மாதமும் கோள்கள் பொறுப்பு வகித்து காக்கின்றன.

முதல் மாதம் - சுக்கிரன், இரண்டாம் மாதம் – செவ்வாய், மூன்றாம் மாதம்-குரு, நான்காம் மாதம் - சூரியன், ஐந்தாம் மாதம் - சந்திரன், ஆறாம் மாதம்-சனி, ஏழாம் மாதம் - புதன், எட்டாம் மாதம் - அந்த சிசு பிறக்க இருக்கும் லக்கினத்தின் அதிபன், ஒன்பதாம் மாதம் - சந்திரன், பத்தாம் மாதம் - சூரியன் என கோள்கள் ஆட்கொண்டு குழந்தையைப் பிறக்கவைக்கின்றன.

குறைப்பிரசவம், பிறந்த உடன் இறத்தல் என்பன எல்லாம் கோள்களின் தாக்கம் என்பது நன்கு தெளிவாகின்றது. அதாவது கரு உருவாகும் போதே அதன் தலைவிதி நிர்ணயம் செய்யப்படுகின்றன. எனவே தான் ஜாதகம் எழுதும்போது கர்ப்ப சொல் நீக்கி என்று திசாபுத்தி குறித்து சோதிடர்கள் எழுதுகின்றனர்.

#### திசாபுத்தியும் மனிதர்களின் வாழ்க்கையும்

மனிதர்கள் வாழ்க்கையின் நிர்ணய அளவீடு திசாபுத்தி எனலாம். அவரவர் திசாபுத்திக்கு ஏற்ப கிரகக் கோள்கள் சுழற்சிக்கேற்ப பிறந்த குடியின் ஊழ்வினைக்கு ஏற்ப மனிதர்கள் வாழ்க்கை செல்கின்றது.

ஒருவரின் ஆயுளின் அளவு மற்றவர்க்கு இருப்பது இல்லை. விதியின் இயல்புக்கு ஏற்ப அவரவர் ஆயுள், அவரின் ஆயுள் முடியவேண்டிய வழிகளில் முடிகின்றன என்பது அனுபவ உண்மை. ஒருவரின் விதிப்படி மரணம் இதனால் என்று இருந்தால் அதன்படியே அவரவர் மரணமும் நிகழ்கின்றன. இதனை எவராலும்எப்படியும் மாற்றி அமைக்க முடிவதில்லை.

## இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் தேக்கம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் கடந்த வருடம் கொண்டு வரப்பட்ட மரக்கறி விதைகள் பெருமளவில் குடாநாட்டில் உள்ள பன்னிரண்டு கமநல சேவை நிலையங்களில் தேங்கியுள்ளதாக தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள உணவு விவசாய நிறுவனம் கடந்த வருடம் குடாநாட்டிலுள்ள 3200 பயனாளிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளை இலவசமாக விநியோகம் செய்திருந்தது.

இதனால் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதை இனங்களை உற்பத்தி செய்த விவசாயிகள் அவற்றினை கூடிய விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி மரக்கறிகளை உற்பத்தி செய்வதில் நாட்டம் குறைந்திருப்பதனால் இவ் விதைகள் கமநல நிலையங்களில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-77)

## கிணற்றில்வீழ்ந்து சிறுவன் மரணம்

(கரணவாய்)

விளையாடிக் கொண்டிருந்த வேளையில், தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து 10 வயதுச் சிறுவன் மரணமானார்.

இச்சம்பவம் இமையாணன் மேற்கு துவாளிப்பிள்ளையார் கோயிலடியில் இடம் பெற்றுள்ளது. (க-27)

## கரட் செடியில் இலைக் கருகல்

கோப்பாய்ப் பகுதியில் விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட கரட் செடிகளின் இலைகளில் கருகல் நோய் ஏற்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கோவாப் பயிர்களில் கூடுதலாகப் புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(க-79)

## மகளிர் அபிவிருத்தித் திட்டங்கள்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால், மகளிரது ஆத்மீக, ஆற்றல், அறிவு, மனப்பாங்கு போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் 25 அம்சங்கள் அடங்கிய புதிய திட்டம் நடை முறைப்படுத்தப் படவுள்ளது.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ள திட்டங்களில், மகளிர் நம்பிக்கை நிதியம் அமைத்தல், மகளிர் ஓய்வூதியத்திட்டம், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, மொழித்திறன் பயிற்சி, கைத்தொழில் முயற்சி சிறுவர்களுக்கான போஷாக்குத்திட்டம் என்பன அடங்கும். (க-59)

## த. வி. கூட்டணி முயற்சியில் ஆங்கில வகுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் ஆங்கில பயிற்சி வகுப்பு ஒன்றை நடாத்திட தமிழர்விடுதலைக் கூட்டணி (TULF) கட்சியினர் முயற்சி எடுத்து வருகின்றனர். இதன் முதற்கட்டமாக மாநகர சபை பொது நூலகத்திற்கு அருகாமையில் பயிற்சி வகுப்பு நடாத்தக் கூடிய ஓர் இடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த இடத்தை பிரதி முதல்வர் திரு. ரவிராஜ் பார்வையிட்டார். இவ்வகுப்பினை நடாத்திட பிரித்தானியாவிலிருந்து தகுதியான ஆசிரியர்களை வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## கோப்பாயில் கண்காட்சி

(அச்சுவேலி)

முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தொழிற் திறன் பயிற்சி நெறிகளுக்கான கண்காட்சி கடந்த 25ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது.

முறைசாராக் கல்விப் பரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. இ. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சி காலை 10 மணிமுதல் பிற்பகல் 5மணி வரை இடம் பெற்றது.

(க-14)

மன்னுயிர் ஓம்பி அருளாள்
வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை
- குறள்

# வலம்புரி

## உரிய இலக்கு நோக்கி

சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லையிக்கை என்ற தோரணையில் பெரும் பான்மையினச்சிந்தனை இருக்கக் கூடாது. உலகம் விழித்துக் கொண்டு விட்டது. கோளமயமாக்கல் ஒரு புறம், ஈமெயில் இன்ரநெற் என்றெல்லாம் ஒளி வேகம் போல் உயர்ந்து செல்கிற மேற்குலக நாடுகள். இதனைத்தான் தீர்க்க தரிசனத்தோடு மெத்த வளருது மேற்கு என்றான் பாரதி. நம் நாடு நாசகார வழியில் நலிந்து மெலிந்து உருக்குலைந்து கொண்டிருக்கிறது. சுற்றம் துறந்து, சுகம் மறந்து உற்றதே வாழ்வு என்று உழல்கின்ற நிலை.

விழலுக்கு இறைத்த நீர் போல புத்திஜீவிகளினதும், அரசியல் மேதைகளினதும், அனுபவப் பேராளர்களினதும் சிந்தனை போய் விட்ட காலம் சென்ற காலம். நிகழ்காலம் அவ்வாறு போய் விடக்கூடாது. ஏனெனில் எதிர்காலத்திலாவது எங்கள் வாரிசுகள் ஏந்தும் கையர்களாய் இல்லாது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும். சுதந்தரப் பூமியில் நாடோடி வாழ்வு தவிர்த்து நிரந்தர வாழ்வு பெற வேண்டும்.

சமாதானம் என்று சிந்தையும் வாயும் சிந்தித்து செப்பும் காலம் இது. இந்த வேளையில் நடந்து வந்த பாதையின் தடங்கள் அகத்திரையில் வந்து வந்து போகின்றன. காலம் நமக்கு எவ்வளவோ பாடங்களைப் புகட்டி விட்டுச் சென்றுள்ளது. எத்தனையோ உயிர்கள் பழிவாங்கப்பட்டு, எவ்வளவோ இரத்தம் சிந்தப்பட்ட பின்னரே, தந்தை செல்வாவின் சமஷ்டிக் கொள்கையின்க்கம் பெரும் பான்மை இன அரசியல் கட்சிகள் தமது பார்வையைச் செலுத்தத் தொடங்கியுள்ளன.

பிரதமர் கதிரையை அலங்கரித்த அம்மையார் சிறிமாவோ இப்பொழுது தான் விழித்துக் கொண்டிருக்கிறார். அது சுடலை ஞானமாக இல்லாது சிந்தனைத் தெளிவாக அமைந்தால் எங்கள் நாடு நலம் பெறும். எதிர்கால சந்ததி எம்மைக்குறை கூறும். மன்னிக்காது என்ற தோரணையில் துளிர்த்தது அன்னவர் ஞானம்.

அப்பாடா... இனியும் தப்பாக ... எதுவும் நிகழாது தப்பாது மலரட்டும் சமாதானம்.

- அன்புடன் ஆசிரியர்

## தையல் பயிற்சி வகுப்புகள்

(கல்வியங்காடு)

அறவழி செயலகத்தின் ஏற்பாட்டில் வேலையற்ற யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது.

மார்ச் 2 ஆம் திகதி மட்டுவில் தெற்குப் பகுதியிலும், 26ஆம் திகதி மட்டுவில் வடக்குப் பகுதியிலும் இடம்பெற்றதாக அறவழி செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-54)

## வன்னிக்கு உணவுப் பொருள்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடில்லாத வன்னிப்பகுதிக்குநேற்று முன்தினமும் 23 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 16 லொறிகளிலும் முல்லைத்தீவுமாவட்டத்திற்கு 4 லொறிகளிலும் மன்னார் மாவட்டத்திற்கு 3 லொறிகளிலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-4)

## இரு அதிகாரிகள் காயம்

(ஏறாவூர்)

அம்பாறை கோணகலயில், நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலில் இரண்டு இராணுவ அதிகாரிகள் காயமடைந்துள்ளனர். இவர்கள் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை சின்னசிகிரியா இராணுவ முகாமில் இருந்து பதுங்கித் தாக்கும் நடவடிக்கைக்கென சென்றிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. (க-108)

மட்டக்களப்பில் 'பாஸ்' நடைமுறையை எதிர்த்து

# கிழக்கு. பல்கலை மாணவர்கள் நேற்று முன்தினம் மறியல் போராட்டம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புத்தரப்பினரால் அமுல் படுத்தத் தீர்மானித்துள்ள பாஸ் முறையினைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 10.30 முதல் ஒரு மணிநேரம் இப்போராட்டம் இடம் பெற்றது.

மாணவர்கள் பிரதான வீதியில் சுலோகங்கள் ஏந்திய வண்ணம் கோஷம் எழுப்பினர். இதனால் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதிப் போக்குவரத்து சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் தடைப்பட்டு இருந்தது.

துண்டுப் பிரசுரங்களும் மாணவர்களால் விநியோகிக்கப்பட்டன.

வவுனியாவில் அனுமதிப் பத்திரம் திருமலையில் விசேட அடையாள அட்டை, யாழ்ப்பாணத்தில் அதிவிசேட அடையாளஅட்டை என்பன போன்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களை அந்நிய நாட்டுப் பிரஜைகளாகக் கணிக்கும் செயலாகும். எனவே மட்டக்களப்பில் நடைமுறைக்கு வரவுள்ள பாஸ் முறை ரத்து செய்யப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

(க-108)

## மண்டலாபிஷேகம்

(வரணி)

வரணி தாவளை இயற்றாலை கல்வளைப் பிள்ளையார் கோயில் மண்டலாபிஷேகம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை காலை விசேட பூசை ஆராதனையுடன் முடிவுறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-28)

# சிவராத்திரி தினத்தன்று கீரிமலைக்கு சென்று தீர்த்தமாட அனுமதிக்க வேண்டும்

## இந்துஇளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 4 ஆம்திகதி சிவராத்திரி தினத்தன்று யாழ் குடாநாட்டு மக்கள் கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடவும், வாராந்தம் வெள்ளிக்கிழமை தோறும் விசேட தீர்த்த யாத்திரைகளையும் தலயாத்திரைகளையும் மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கவேண்டும்.

மேற் கண்டவாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது சிவராத்திரி தினத்தன்று ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவதுடன் மது,மாமிச கடைகளையும், சினிமா தியேட்டர்களையும் மூடி சமய வழிபாடு சிறக்க சைவ சமயிகள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின்பிரதிகள்யாழ். பலாலி இராணுவ தளபதி [சிவில்நிர்வாகம்], யாழ்ப்பாணம் ஐ. நா. ஸ்தாபனங்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் யாழ்ப்பாணம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்ப்பாணம், மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணம் ஆகிய அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (க)

## மட்டக்களப்பில் மோதல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு செங்கலடி-பதுளை வீதியில் களுவன் மேடு எனும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும், ராஸிக் குழுவுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிக்கு செங்கலடி இராணுவமுகாமிலிருந்து ஷெல் வீச்சு மேற்கொள்வப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

(ந-108)

## இன்றைய சிந்தனை

''மனம் சங்கடப் படும் போது உண்மையாய் ஆறுதல் சொன்னவர் முகம் எப்போதும் நினைவில் இருக்கும்''

# உடனிருப்பும் உறவாடலும் உறவின் சாயல்களே

"என்ன அப்பா சுகமாயிருக்கிறீர்களா?

ஓம் பிள்ளை என்னத்தைச் சொல்லுறது. என்னுடைய வாழ்க்கை ஒரு நடைப் பிணமே வயது போன காலத்தில் எங்களையும் பார்த்து யாரும் கதைப்பார்களோ, எங்களுடைய சுக துக்கங்களைப் பகிர யாரும் வருவார்களோ என்று ஏங்குகிறேன். மனிதனை மனிதனாகமதித்து அன்பு வார்த்தை பேச, கேட்க இந்த உலகத்திலே நேரம் இருக்கோ பிள்ளை? நான் சாகும்வரை உள அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஜீவன் தான். ஆம், இவ்வாறு எத்தனையோ முனகலின் குரல்கள் இன்றைய சமூகத்தில் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. இதன் அழுத்தங்களே இன்று நாம் காணும் நிகழ்வுகள். அதாவது தனிமை என்னும் நோய் மிகவும் பயங்கரமானது. அது இளைய தலைமுறை தொடங்கி முதியவர் வரை தாவுகிறது. இந்தத் தனிமையே மன அழுத்தங்களுக்கும் விரக்தியின் விளிம்பிற்கும் தாழ்வு மன நிலைக்கும் அழைத்துச் செல்கின்றது.

குடும்பக் கஷ்டத்தினாலும் நாட்டு சூழலாலும் தம் கல்வியைத் தொடர முடியாத மாணவர்கள், யுத்த நிலமைகளால் தாய்ப் பாசமிழந்து சகோதர பாசமிழந்து அன்பைத்தேடும் பிஞ்சு உள்ளங்கள், கஷ்டப்பட்டு படித்தும் நல்ல பெறுபேறுஅடையாதபரீட்சார்த்திகள், பட்டம் பெற்றும் வேலைக்காக அலையும் பட்டதாரிகள், வயதெல்லை கடந்தும் திருமணமாகாத மங்கையர் திருமணமாகியும் யுத்த கொடுமையால் உருவான விதவைகள், ஓய்வுபெற்று வீட்டு மூலையில் ஒதுங்கியிருக்கும் முதியோர் இவ்வாறு ஒரு பட்டியல் தாயாரித்துக் கொண்டே செல்லலாம். இந்த உள்ளங்கள் விரக்தியின் விளிம்பில் நின்று தோன்றியிருக்கலாம். தொடரும் போரின் வடுக்களாகவும் இருக்கலாம். இவர்கள் தனி



மையில் தன்னகத்தே சிந்திக்கும் போது தமது எதிர்காலம் நள்ளிரவில் எழும் அபயக்குரலில் கேள்விக் குறியாகவே அமைகின்றது.

ஆறுதல் தேட, ஆலோசனை பெற, அன்பை சுவைக்க முடியாது துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எம்மால் செய்யக்கூடிய உதவி என்ன?

இத்தகைய ஒரு சூழலில் தான் இயேசுக்கிறீஸ்துவும் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள், முப்பத்தெட்டு ஆண்டுகளாக படுக்கையிலிருந்த திமிர் வாதக்காரனை யேசுவிடம் கொண்டு வந்தார்கள். இயேசு ஒருவரே அவனுக்கு விடுதலை அளிக்கக்கூடியவர் என்று அன்றைய மக்கள் விசுவசித்தார்கள். இதை உணர்ந்த இயேசு அவனுக்கு முதலில் உளவிடுதலை அளிக்கவே முன்வருகிறார். நான் பெரும் பாவி என்ற தாழ்வு மனப்பள்ளத்தாக்கிலிருந்தவனை இயேசு தூக்கி விடுகிறார். எல்லா வசதி வாய்ப்புக்களும் நிறைவாக இருந்தும் மன அமைதி இல்லையேல் மனித வாழ்க்கையே வீணானது. ''உன் பாவங்கள் — மன்னிக்கப்பட்டன'' என்று உள விடுதலை அளித்த பின்பே இயேசு நோயினை குணமாக்குகிறார். உள அமைதியின்மையே எல்லா அழுக்தங்களுக்கும் காரணமாகின்றது.

அமைதிக்காகஏங்கும் எமது சமூகத்திலே எனது பணி என்ன? அன்னதானங்களும், அன்பளிப்புக்களும் பிறரன்புச் செயல்களாகலாம். சொல்லடுக்கு நிறைந்த பேச்சுக்களும், உரைகளும் மக்களுக்கு அறிவுரை புகட்டலாம், இலக்கிய நயம் நிறைந்த கட்டுரைகள் வாசிக்கச் சுவையாக இருக்கலாம். ஆனால் இவற்றால் மனித மாண்பினை மதிக்கின்றோமா? அருகில் போவது யாரென்றே தெரியாமல் இன்றைய சமூகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. நான் என்ன செய்கின்றேன் என்று தெரியாமல் மனிதன் மாறிக் கொண்டிருக்கின்றான்.

இறைவன் எல்லாவற்றிற்கும் மேலான படைப்பாக மனிதனை ஏன் படைத்தார் என்றால் தனது சாயலை அவன் வாழும் சூழலில் வெளிப்படுத்துவதற்கே இதை ஒருவரும் சிந்தித்துப்பார்ப்பதில்லை. அன்பைப் பெறவும் மற்றவர்களால் மதிக்கப்படவும் விரும்புகிறான் மனிதன் ஆனால் அந்த மனிதன் அதே அன்பை, மதிப்பை, பிறருக்கும்கொடுக்க வேண்டுமென்பதை உணருவதில்லை.

இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டிலே விஞ்ஞானம், கணனி யுகத்தில் முன்னேறுகின்றது. ஆனால் எம் இதயங்களையும் கணனி இயந்திரங்களாக மாற்றிக் கொள்ளாது ஈரம்கசியும் கனிவுள்ள இதயங்களாக மாற்றுவோம். இறைவன் தந்த இரு கண்களால் நல்லதைப்பார்த்து, கேட்கத்தந்த செவிகளால் அபய, அவலக் குரல்களையும் முனகல் சத்தங்களையும் காது கொடுத்துக் கேட்போம். இறைவன் தந்த புன்சிரிப்பில் மற்றவனை மகிழ்விப்போம். அன்பு மொழியும் இனிய சொற்களால் சோர்ந்த உள்ளங்களைத்தட்டியெழுப்புவோம். இழந்த உற்சாகத்தை மீண்டும் தோற்றச் செய்தோம். யுத்த வடுக்களை மனித நேயத்தினால் மறைத்திடுவோம். உடனிருப்பும், உறவாடலும் உள அமைதிக்கு வித்தாக்கி இறைவனைக் காண்போம்.

சகோதரி றோமலா அன்ரனி

★

★ இராணுவத்திற்கு ஆள்சேர்ப்பு

# தப்பி ஓடியவர்களைக்கண்டு பிடித்து இராணுவத்தில் இணைக்கவேண்டும்

## வன்னிப் படை அதிகாரி கருத்து

(வவுனியா)

இராணுவத்திற்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பதை விட இராணுவத்தில் இருந்துதப்பி ஓடிய சுமார் பத்தாயிரம் இராணுவ வீரர்களைக் கண்டுபிடித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து மீண்டும் அவர்களை சேவையில் இணைக்க வேண்டும்.

இவ்வாறு வன்னிப்படை அதிகாரி ஒருவர் கொழும்பிலிருந்து வன்னிக்கு பாதுகாப்பு அமைச்சினால் அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னிப் போக்கு வரத்து முக்கியத்துவம் வாய்ந்த பிரமனாளங்குளம் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தின் குறைகளைக் கேட்டறியுமாறு பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் செய்தியாளர்களுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே செய்தியாளர்கள் அங்குள்ள இராணுவ உயர் அதிகாரியுடன் கலந்துரையாடினார்கள். இக் கலந்துரையாடலின் போது இராணுவ அதிகாரி செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:

இராணுவத்தில் இருந்து தப்பிஓடியவர்களை இராணுவத்தில் மீண்டும் இணைப்பதன் மூலம் பாதாள உலகக் கோஷ்டி உருவாவதைத் தடுக்கமுடியும். அதுமட்டுமல்லாமல் பயிற்சி பெற்ற இராணுவவீரர்களின் சேவையை நாட்டுக்கு அர்ப்பணிக்க முடியும்.

இராணுவத்தில் இருந்து தப்பிஓடும் இராணுவ வீரர்கள் ஏதோ ஒரு காரணத்துக்காகவே தப்பிஓடும்போது ஆயுதப்பயிற்சி பெற்றவர்களாகவே செல்கின்றார்கள்.

இப்படித்தப்பி ஓடுபவர்களை சில அரசியல்வாதிகளும், பாதாள உலகக் கோஷ்டிகளும் தங்களது அடியாள்களாக வைத்திருக்க விரும்புகின்றனர்.

அரசியல் வாதிகளிடமும் பாதாள உலகக் கோஷ்டிகளிடமும் தொடர்புடையவர்களாக இருக்கும் இவர்கள் சட்டவிரோத செயல்களிலேயே ஈடுபடுகிறார்கள். இவர்கள் தப்பி ஓடும் காரணங்களைக் கண்டறிந்துகொள்ள அரசு வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறினார். (வ)

### ஜனாதிபதி---

கடிதத்திற்குபதில் கடிதத்தை ரணில்விக்கிரமசிங்காஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ரணில் விக்கிரம சிங்காவினால் ஜனாதிபதிக்குஅனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும்குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

புதியஅரசியல் அமைப்பை வரைவதில் ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைகளை 1997, 1998 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்பதையும் தமது கடிதத்தில் ஞாபகப் படுத்தியுள்ளதாகவும்;

1999ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்விஞ்ஞாபனத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக முன்வைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மோதலுக்கான தீர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் என்னும் தலைப்பிலான குறிப்பொன்றையும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ-7

### இலங்கையில்---

ளாதல், யுவதிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுதல் நடைபெறும் உலக நாடுகள் 15இல் இலங்கையும் ஒன்று என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1996-ம் ஆண்டு புலிகளை அழிப்பதாகக் கூறி 350க்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களை படுகொலைசெய்துவிட்டு காணாமல் போயுள்ளவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டுக்கும் 1999 ஆம்ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 16 ஆயிரம் தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் 1976 தமிழ் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், காணாமல் போய் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### சிவராத்திரி---

மற்றும் தேவார திருவாசக முற்றோதலும் அன்றைய தினம் இடம் பெறும் எனவும் ஆலயபரிபாலன சபைத் தலைவர் எஸ். நமசிவாயம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து திருக்கேதீஸ்வரம் வரவிருக்கும் பக்தர்கள் 23 மகாவித்தியாலய மாவத்தை கொழும்பு 13 என்றமுகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

4 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருக்கேதீஸ்வரம் வந்து 5 ஆம் திகதி காலை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### மன்னார்--

மீனவர்களையும் வன்னி மாவட்ட எம்.பி சித்தார்த்தன் விடுவிப்பதற்கு கற்பிட்டி பொலிசாருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மூன்று படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களாவர். (வ102)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

**திருமதி கோமளா திருநாவுக்கரசு**

அவர்களின் அன்பு மகன்

**திருநாவுக்கரசு சுதர்சன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரம் அடைகின்றோம்

பாசமிகு புதல்வனின் பிரிவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களின் துயரலைகளில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர் பணிப்பாளர்கள்
பொது முகாமையாளர்
பணியாளர்கள்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி.

(கி-100)


## பொ.ஜ.ன.ஐ.மு. நாளை கூடுகிறது

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்புச் சட்ட திருத்த மூலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு கிடைக்காத நிலையில் மாற்றுவழி ஒன்றினைக் கண்டறிவதற்கு நாளை பொது சன ஐக்கிய முன்னணியின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது, (வ)

### யாழ். கடலில்---

யலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் 51வதுபடைத் தளபதி காமினி ஜெயசுந்தர மற்றும் கடற்படை உயரதிகாரிகள்குருநகர், பாஷையூர், நாவாந்துறை பிரதேச இராணுவ அதிகாரிகள் ஈ. பி, டிபியின் வலிறேங்கு பிரேதச சபைத் தலைவர் திரிலோகநாதன் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கடல் எல்லைகளில் மீன்பிடிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

இதற்கு ஏதுவாக இன்று ஞாயிற்றுக்கிழமை இராணுவ மற்றும் கடற்படையினரால் மீன்பிடிப்பதற்கு வரையறுக்கப் பட்ட எல்லைகளைக் கடற்றொழிலாளர்களுக்கு காண்பிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது,

இதேவேளை நாளையும், நாளைமறுதினமும் கடலில் விடுபட்ட மீன்பிடிஉபகரணங்களை மீட்டபின்பு காலை 5மணி முதல் பிற்பகல் 4மணி வரை மீன்பிடித்தொழிலை ஆரம்பிப்பர்.

ஈ.பி.டி.பி.யினர் ஜனாதிபதியை இம்மாதம் முற்பகுதியில் சந்தித்தபோது மீன்பிடித்தடையை உடனடியாக நீக்குவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்த போதிலும் அது உடனடியாக சாத்தியப்படவில்லை.

எனினும் தொடர்ந்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வி. கே. ஜெகன் எடுத்த தீவிர முயற்சி காரணமாகவே இத்தடைச் சட்டம் நீக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஒவ்வொரு மாதமும் முதலாவது வியாழக்கிழமையில் இராணுவ கடற்படையினர் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிய வேண்டும் எனவும் ஜெகன் எம்.பி. கேட்டுக்கொண்டார்

மிகிந்தலை கைக்குண்டுத்தாக்குதலில்

## பிரதி அமைச்சர் சாந்தபிரேமரட்ண காயம் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

மிகிந்தலை விகாரைக்கு அருகில் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் திட்டமிடல் அமுலாக்கல் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சாந்த பிரேமரெட்ன காயமடைந்துள்ளார்

நேற்றுக் காலை 10 மணியளவில் மிகிந்தலை நகரில் விஜய குமாரதுங்க கணனிப் பயிற்சி நிலையத்தைப் பார்வையிடச் சென்றபோதே இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த பிரதி அமைச்சர் மிகிந்தலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து அனுராதபுரம் விசேட பொலிஸ் அத்தியட்சகர் வில்பிரட் மாநாயக்க தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்று அனுராதபுரத்தில் நடைபெற இருந்த கிரிக்கெட் சங்கஉத்தியோகத்தர் தெரிவில் இவரும் போட்டியிட இருந்தது குறிப்பிடத்தக்கது, (வ-7)

## தப்பிஓடிய இராணுவத்தினர் சரணடைய அவகாசம்நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய ராணுவத்தினரை மீண்டும் இராணுவ சேவையில் சேர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் இன்று நள்ளிரவு 12மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தப்பி ஓடிய இராணுவத்தினர் முன்னர் என்ன தரத்தில் இருந்தார்களோ அதே தரத்தில் அவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணைந்து சேவை செய்யலாம் என்றும் அவர்கள் எந்தவொரு முகாமிலும் இணையலாம் எனவும் அவர்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படமாட்டாதெனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம்வரை 507 இராணுவத்தினர் மீண்டும் சேவையில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-3)

மும்பாய் டெஸ்ட் போட்டியில்

## தென்னாபிரிக்க அணியிடம் இந்தியஅணி மண்கவ்வியது

மும்பாயில் நேற்று நடைபெற்ற இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான கிரிக்கட் டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா 4 விக்கற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது,

முதல் இனிங்ஸில் இந்தியா 225 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 113 ஓட்டங்களையும் பெற்றிருந்தது,

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 176 ஓட்டங்களையும், இரண்டாம் இனிங்ஸில் 6 விக்கட் இழப்பிற்கு 164 ஓட்டங்களையும் பெற்று இந்திய அணியை வென்றது,

இதேவேளை நேற்று நியூசிலாந்து அவுஸ்திரேலியஅணிகளுக்கிடையேயான 4ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் அவுஸ்திரேலியா 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது,

### சல்லித்தீவு...

கம் பிற்பகல் 1 30 மணி வரை இடம் பெற்ற இம் மறியல் போரட்டத்தில் பெண்கள், குழந்தைகள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டு கடற்படைக்கு எதிராகக் கோஷமெழுப்பினர். இதே வேளை திருமலை சல்லிப்பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு கடற்படையினர் அப்பாவித் தமிழ் மக்கள் மீதும், அவர்களது உடைமைகள் மீதும் மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்களைப் போல் வருங்காலத்தில் நடைபெறாதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் எனத் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபரும், திருமலை மாவட்ட எம்.பி.யுமான இரா. சம்பந்தன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். (வ)

### விடுதலைப்புலி---

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசுவார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே அரசு சமாதானமுயற்சியைமேற்கொண்டுள்ள வேளையில் மன்னார் இரத்தினபுரி ஆயர்கள் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசவுள்ளமை இனப்பிரச்சனைத் தீர்வில் முக்கியத்துவம் வாய்ந்ததென்று அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை லண்டனில் தங்கியிருக்கும் ஆயர்கள் அங்குள்ள பல்வேறு பொது அமைப்புக்களையும் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக எடுத்துக் கூறுவார்கள் எனவும் தெரிய வருகின்றது. (ந)

### விடுதலைப்

வில் எமது தியாகத்திலும் பார்க்க புலிகளின் தியாகம் மகத்தானது என்று சம்பந்தன் எம். பி குறிப்பிட்டார்

ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விடுதலைப்புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும் என்றால் எமக்கு அதில் ஆட்சேபனை இல்லை என்று கூறினார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் ஜனநாயக சூழ்நிலையில் பேசுவதக்கு எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும்இல்லை என்று முன்னாள் எம்.பி சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அரசு பேச்சுக்களை நடத்த விரும்பினால் அதற்கு நாம்தடையாகஇருக்கமாட்டோம் என்று புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான த. சித்தார்த்தன் கருத்துத் தெரிவித்தார். (வ)

### இனப்பிரச்சினை--

யில் இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதானப் பேச்சில் சகல தரப்பினரும் கலந்து கொள்ளவேண்டுமென்று கூறினார். (வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.